**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் -2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை

தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை பல்கலைக்கழகத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 50 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்றால் நிறுவனமொன்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது இயற்கையாக அல்லது செயற்பாட்டின் சமமான சொத்துக்களாகும்.எவ்வாறாயினும், ரூபா 263,439,263 பெறுமதியான தொலைபேசி, VIOP தரவு வலைப் பின்னல், மின்சாரம் கோட்டுக்கள் உள்ளக பாதை மற்றும் நீர் விநியோகம் ஆகியன சமமான இயற்கை சொத்துக்கள் அல்லது செயற்பாட்டின் படி வேறான வகுப்பாக காட்டுவதற்கு பதிலாக ஏனைய சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | பாதைகள் மற்றும் மின்சார வளங்களின் வலைப்பின்னல் ஆகிய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வேறொரு வகுப்பாக முறையே ‘‘பாதைகள்’’ மற்றும் ‘‘மின்சார வளங்களின் வலைப்பின்னல்’’ என காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு 5 வகைகளுக்கு இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது பிரிவின் பிரகாரம் மீள் மதிப்பீடு மேற்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த சொத்துக்களின் முழு கிரயம் ரூபா 721,793,649 ஆகும். | மீள்மதிப்பீடு நிறைவடைந்ததன் பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் மீள்மதிப்பீடு பெறுமதி 2020 வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் தொட்டுணர முடியாத தன்மையான ரூபா 52,248,610 ஆன சொத்துக்களுக்காக தேய்மான கொள்கை அடையாளங் கண்டிருக்கவில்லை. | நிலையில்லாத சொத்துக்களின் கீழ் இறுதி வருடத்தின் செயற்திட்டம் தனித்தனியாக காட்டப்படும் தொட்டுணர முடியாத சொத்துக்களின் கீழ் அவை வெவ்வேறாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தொட்டுணர முடியாத தன்மையான சொத்துக்களுக்காக தேய்மானம் மேற்கொள் வதற்கான கொள்கையை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்திற்கு உரிய ரூபா 194,411,091 கிரயத்தினாலான உள்ளக பாதைகள் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இருப்பினும் உள்ளக பாதைகளுக்கான பெறுமானத்தேய்வு கொள்கை இனங்காணப்படாமல் நூற்றுக்கு 5 மற்றும் நூற்றுக்கு 20 ஆக பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் ''பாதைகள்'' என்ற வேறான வகுப்பாக வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்கான பெறுமானத்தேய்வு கணக்கீட்டு கொள்கையின் படி சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ள உள்ள பாதைகளை பெறுமானத்தேய்வு கொள்கையை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் பதிவுகள்

| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வகை | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | பொருள் மெய்மை யாய்வு சபையின் அறிக்கையின் பிரகாரம் | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| தளபாடங்கள் | 502,887,595 | 501,957,942 | 929,653 | வித்தியாசத்தை இணக்கஞ் செய்வதற்கு இப்போதே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது இந்த இணக்கத்தை காரணப்படுத்தி இணங்காத தொகை சென்ற வருடத்திற்கு இணையாக குறிப்பிடக் கூடிய அளவில் குறைந்துள்ளது. | கட்டுப்பாட்டு கணக்குகளில் காணப்படும் வித்தியாசங்களை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| அலுவலக உபகரணங்கள் | 599,166,094 | 93,406,932 | 5,759,162 | | |
| | | | 6,688,815 | | |

### 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் மீதியொன்று, மஹபொல புலமைப்பரிசில் முற்பணமொன்று, 02 பிணை சட்டத்தை மீறியமை, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் 13 நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய ரூபா 1 ,783,077 02 வருடத்திலிருந்து 18 வருடங்கள் வரையான காலம் அறவிடப்படாமல் நிலுவையாக காட்டப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய முழுத் தொகையையும் அறவிடுவதற்கு, சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து UPF அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் அறவிடப்படும் தன்மையை பொருத்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | பெறப்பட வேண்டிய நிலுவை அளவுகளை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 102, 103 மற்றும் 104 மற்றும் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைச் சபையின் 2016 திசெம்பர் 22 ஆந் திகதி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட 2004/எல்டீ/1 ஆம் இலக்க சுற்று நிருபம் | 2017 ஆம் வருடத்தில் இடம்பெற்ற நூலக புத்தக தொகையின் சரிபார்ப்பு அறிக்கையின் படி ரூபா 303,491 பெறுமதியான 473 புத்தகங்கள் தொலைந்திருந்தது. இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த புத்தகங்கள் காணாமல் போன அதற்கான காரணத்தை கண்டறிய பல்கலைக் கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பொறுப்பு வாய்ந்த நபர் / நபர்கள் இருந்தால் பொறுப்பளிப்பதற்கும் மற்றும் / அல்லது எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் சுற்று நிருபத்தின் அமைவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் 2 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பல்வேறு நிதியங்கள் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 35,284,825 பணம், நிதி அமைச்சின் மற்றும் உயர்கல்வி அமைச்சின் இணக்கப்பாடுகளின்றி 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்படும் போது நிதி அமைச்சின் மற்றும் உயர் கல்வி அமைச்சின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவை மற்றும் நிதிச் சட்டத்தின் அமைவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனக் கோவையின் | i. 2018 ஆம் ஆண்டிற்காக இடம்பெறுகின்ற வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையினால் 1073 வகையானவைகளை விற்பனை | இந்த நடைமுறை களுக்கு அனேகமான செயற்பாடுகள் காணப்படுவதுடன் தேவையான அனைத்து செயற்பாட்டு வழிகளும் நிறைவு | மேலும் தாமதங்களின்றி உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயம் XXIV இன் 3 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகள் | செய்வதற்காகவும் 418 வகையானவைகளை அழிப்பதற்கும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த அறிக்கையின் திகதி வரைக்குமே இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வில்லை. | செய்யப் பட்டுள்ளதுடன் சபையினால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்த பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் அழித்தல் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படும். | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | | ii. மேலும் 2012 இலிருந்து 2017 வரையான காலத்திற்குள் இடம்பெற்ற நூலக புத்தகங்கள் தொடர்பான தொகை சரிபார்ப்பு சம்பந்தமான அறிக்கையில் முன்மொழியப்பட்டுள் ள வழிமுறைகளை இதுவரை செயற்படுத்தியிருக்க வில்லை. | செனட் சபையின் துணைக்குழுவான நூலகக் குழு கலந்துரையாடல் ஒன்றிற்காக தொகை சரிபார்ப்பு அறிக்கையை பொறுப்பெடுத்துள்ள துடன் சேதத்திற்குள் ளாகியுள்ள 1278 வகைகளை நீக்குவதற்கும் “பல்கலைக்கழக நூலகங்களில் தொகை சரிபார்ப்பு செயல் நடைமுறை தொடர்பான கொள்கை தொடர்பான பதிவேடொன்றை தயாரிப்பதற்கும் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. அதனால் தொலைந்து போயுள்ள வகைகள் தொடர்பாக தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு இந்த கொள்கை கிடைக்கும் வரை பல்கலைக்கழகம் காத்திருக்கின்றது. | நூலகக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நூலக புத்தகங்களுக்கான தொகை சரிபார்ப்பு அறிக்கை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 228,235,039 கிரயத்தினையுடைய கணினி மற்றும் கணினி உதிரிப் பாகங்களை பதிவதற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணினி மற்றும் உதிரிப் பாகங்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரித்தல் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் பதிவேட்டின் 92% | IAI/2002/02 திறைசேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | க்கு அதிகமான அளவு தயாரித்து முடிக்கப்பட்டிருப்ப துடன் 2020 யூலை மாத இறுதியளவில் அதை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆந் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்று நிருபம் | அனைத்து பதவியணியினரும் அவர்களின் வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை பதிவு செய்தலுக்காக கைவிரல் அடையாள இயந்திரத்தை பாவனைக்குட்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், கல்வி சார் பதவியணியினர் அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பொது நடைமுறை யொன்றாக இலங்கையில் அரச பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளியேற்றங்கள் பேணப்படுவதில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10/2017 ஆம் சுற்று நிருபத்தின் பிரகாரம் வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை அடையாளப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 229,656,231 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 45,226,543 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 184,429,688 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்குள் சம்பளங்கள் மற்றும் பணிக்கொடைகள் முறையே ரூபா 258,058,056 வில் மற்றும் ரூபா 161,669,219 வில் அதிகரித்தமை இந்த பற்றாக்குறைக்கான காரணங்களாக காணப்படுகின்றன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மானியம் மற்றும் வேறு வருமானங்கள் போன்ற பல்கலைக்கழக வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 23 சதவீதத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான மஹபொல மற்றும் மாணவ உதவி மானியம் என்பவற்றை ஒப்பிடும் போது நூற்றுக்கு 56 சதவீதத்தால் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விரிவுரையாளர் ஒருவரின் உடன்படிக்கை மீறப்பட்டதற்காக பிணைமுறி பெறுமதியை அறவீடு | சபையின் 231 ஆவது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட | பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்து உரிய |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக பொறுப்பான உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக ஆறு ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தாமதித்திருந்த காரணத்தால் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1.73 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொண்டிருக்க வில்லை. | தீர்மானமானது 2000/12/06 ஆம் திகதியில் இருந்து 2010/07/13 ஆந் திகதி வரை கல்வி நிறுவன பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் இந்த நட்டம் தொடர்பாக பொறுப்பாக தமது கடமையை நிறைவேற்றவில்லை என்பதேயாகும். நட்டத்தை ஈடுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபையின் தீர்மானங்களை இப்போதே கல்வி நிறுவன பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1999 இல் இருந்து 2008 வரையான காலத்திற்குள் பல்கலைக்கழகத்திற்கு தற்காலிகமாக / நாளாந்த சம்பளம் என்ற அடிப்படையில் கூலிக்கு பெறப்பட்ட 28 ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி செலுத்துதல் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை அதன் பெறுபேறாக மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 16(ஊ) பிரிவின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உரிய திகதியில் பங்களிப்பு தொகையை செலுத்துவதற்கு தவறியதன் காரணமாக பல்கலைக்கழகம் ரூபா 1,215,442 வை மிகைக் கட்டணமாக செலுத்தியிருந்தது. மேலும் மொத்தம் ரூபா 1,022,380 ஆன ஊழியர்களின் பங்களிப்பை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து குறைத்துக் கொள்ளாமல் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக அந்த கொடுப்பனவிற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | பல்கலைக் கழகத்தினால் செலுத்தப்பட்ட ஊழியர்களின் பங்களிப்பை அவர்களின் சம்பளத்தில் அல்லது வேறு வழிகளில் அறவிடுவதற்கு உரிய ஊழியர்களின் விருப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | உரிய ஊழியர் களிடமிருந்து அல்லது பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து ஊழியர் பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிவாரிப் பட்டங்களின் மாணவர் வழிகாட்டல் புத்தகத்தின் பிரகாரம் பட்ட கற்கை நெறியை பூர்த்தி செய்வதற்கான ஆகக் குறைந்த காலஎல்லை 03 கல்வி ஆண்டுகளாகும். எவ்வாறாயினும் BA, BBA மற்றும் B.Com ஆகிய வெளிவாரி பட்டக் கற்கை நெறி மாணவர்களுக்கு முறையாக நிறைவு செய்வதற்கு இறுதி மூன்று குழுக்களுக்கும் 5 வருடங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | கற்கை நெறி வழிகாட்டல் புத்தகத்தை பெற்றுக் கொடுக்க தாமதமாதல், உரிய நேரத்தில் பெறுபேற்றை வெளியிடுவதில் தாமதமாதல், மற்றும் பல்வேறு காரணங்கள் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்படுதல் போன்ற காரணங்களினால் பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கான காலத்தை நீடிப்பதற்கு நேர்கின்றது. கற்கைநெறி வழிகாட்டல் புத்தகத்தை தற்போது பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் எதிர்காலத்தில் தாமதத்தை குறைத்துக் கொள்ள முடியுமாக இருக்கும். | மாணவர் வழிகாட்டல் புத்தகத்தின் பிரகாரம் பட்டப்படிப்பு கற்கை நெறியை உரிய கால எல்லைக்குள் பூரணப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அளவு கோலின் பிரகாரம் கலைகள் மற்றும் கலாச்சாரம், முகாமைத்துவம் மற்றும் வணிகம் மற்றும் இஸ்லாமிய கல்வி மற்றும் அரபு மொழி பீடங்களுக்கான பட்டதாரி அபேட் சகர் : நிரந்தர கல்வி பதவியணியினர் விகிதம் 18:1 ஆக மற்றும் பிரயோக விஞ்ஞானம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்கள் தொடர்பாக அது 10:1 ஆக பேணப்பட வேண்டும். எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட அளவுகோலிற்கு முரணாக பல்கலைக்கழக மேற்படி விகிதம் 20:1 தொடக்கம் 53:1 வரையான வீச்சில் பேணப்பட்டிருந்தது. இதன் விளைவாக கற்பித்தல் மற்றும் கற்றல் மேவுகை போதுமானதாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | 2019 யூன் மாத்திற்குரிய நியமத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் ஊழியர் எண்ணிக்கையை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த பதவியணியினரின் கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைத்து தேவையான நடவடிக்கை களுக்காக அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் இன்னும் அங்கீகாரம் வழங்கியிருக்க வில்லை. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் புதிய ஊழியர் வெற்றிடங்களை அங்கீகரித்ததன் பின்னர் அந்த ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பதவியணியினரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான ஆய்வு கூடமொன்றை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 84,156,395 கிரயம் செலவிடப்பட்டிருந்ததுடன் மின் உபகரணங்களுக்காக ரூபா 1,856,467 வும் 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆய்வுகூடம் இதுவரையும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் தேவையான ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக 4 வருடங்களுக்கு அதிகமான காலம் விளைவற்று காணப்பட்டது. | தற்போது அனைத்து ஆய்வுகூடங்களுக்கா கவும் ஆய்வுகூட வீட்டு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ள துடன் கட்டளை இடப்பட்டிருந்த உபகரணங்களில் 70% க்கு அதிகமாக விநியோகிக்கப் பட்டுள்ளது. இந்தக் கட்டிடம், திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் வேளையிலே ஆய்வுகூடத்திற்கான தேவையான கழிவகற்றல் கேஸ் மற்றும் நீர்க்குழாய் ஆகிய வசதிகளை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்க வில்லை. இடம்பெறுகின்ற கட்டிடத்திற்கு இவற்றை மிகவும் கவனமாக ஸ்தாபிக்க வேண்டியிருப்பதுடன் போதுமான அளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முறையான திட்டங்கள் நிறையவே தேவைப்படுகின்றன. இந்த வசதிகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | இன்னும் தாமதிக்காமல் ஆய்வு கூடத் தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பல்பொருள் வியாபாரக் கட்டிட நிர்மாணம் 2016 ஒக்டோபர் 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது ரூபா 13.33 மில்லியன் செலவிடப்பட்டு 2018 நவம்பர் 29 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இந்த பல்பொருள் வியாபாரக் கட்டிடம் 19 மாதங்களாக உரிய நோக்கத்திற்காக பாவனைக்குட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | IESL அங்கீகாரத்திற்கான பொறியியல் சபைக்கு வாய்ப்புக்கள் காணப்படுவதாக உறுதிப்படுத்து வதற்காக இயந்திர பொறியியலாளர் திணைக்களத்தின் பாவனைக்காக அவர்களின் அவசர மற்றும் காத்திரமான வேண்டுகோளின் அடிப்படையில் இந்த கட்டிடம் பொறியியல் பீடத்தின் பணிமனைக்கு கையளிப்பதற்கு இணங்கப்பட்டது. | பல்பொருள் வியாபார கட்டிடத்தை மேலும் தாமதமின்றி பாவனைக்குட்படுத் துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 இலிருந்து 2017 வரையான காலத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 702,987 பெறுமதியான 59 டயர் மற்றும் டியூப்கள் பாவனைக்குட்படுத்தாமல் 3 வருடங்களுக்கு அதிகமான காலம் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | இந்த டயர் மற்றும் டியூப்களை கொள்வனவு செய்வதற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான எச்சரிக்கையொன்றை மேற்கொள்ளுமாறும் இந்த டயர் மற்றும் டியூப்களை ஏல விற்பனையின் பின்னர் ஏதாவது நட்டம் ஏற்பட்டால் அதனை அவர்களுக்கு மிகைக் கட்டணமாக்கு மாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவரின் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதான நூல் நிலைய கட்டிடத்தின் 80 கதிரைகள் மற்றும் உபகரணங்களைக் கொண்ட இலங்கை விசேட வெளியீட்டுப் பிரிவு மற்றும் கருத்தரங்குப் பிரிவு என்பவற்றுக்கு குளிரூட்டி இயந்திரம் பொருத்தப்படாத காரணத்தால் 02 வருடங்களுக்கு அதிகமான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | பல்கலைக்கழகம் இப்போது குளிரூட்டி கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு செய்தலுக்கான விண்ணப்பக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருப்ப துடன் கொள்வனவுக்கான ஏனைய நடவடிக்கை களுக்காக நிதி கிடைக்கும் வரை இருக்கின்றோம். | சொத்துக்களை உபயோகப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்திற்கு கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தினால் ரூபா 112 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் அது 2014 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2014 ஏப்ரல் 20 ஆந் திகதியில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,977,412 தொகையான தாமதக் கட்டணங்கள் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிடித்து வைக்கப்பட்டுள்ள பணத் தொகையிலிருந்து உரிய தாமதக் கட்டணங்களை குறைத்துக் கொள்வதற்கு இப்போதே பல்கலைக் கழகத்தினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், இன்னும் தீர்ப்பதற்குள்ள ரூபா 168,532 தொகையை கூடிய விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகத்தின் ஊடாக ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது உரிய | தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காலத்திற்குள் உரிய தொகையை தீர்ப்பதற்கு தவறும் பட்சத்தில் பல்கலைக் கழகத்தின் ஊடாக உரிய ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் 13.7 பிரிவிற்கு முரணாக கட்டிடத் தொகுதி நிர்மாணத்தின் போது ஆரம்ப விடயங்களிற்காக மாற்றம் செய்ய முடியாத கூற்றிற்காக பல்கலைக்கழகத்தினால் ஒப்பந்தக்காரரிற்கு ரூபா 2,495,837 தொகையொன்றை செலுத்தியிருந்தது. மேலும், பெறுமதி சேர் வரியை தவிர்த்து மொத்த ஒப்பந்த விலையில் நூற்றுக்கு 5.25 சதவீத விகிதத்தில் மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். இருப்பினும் பல்கலைக்கழகம் இந்தக் கட்டணத்தை இரண்டு வேறுபாடான விகிதங்களை பயன்படுத்தி கணிப்பீடு செய்திருந்தது. இதன் விளைவாக ரூபா 659,138 தொகையொன்று மதியுரையாளருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மதியுரையாளரின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. மதியுரைக்கான கட்டணங்கள் செலுத்துதல் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | ஒப்பந்தக் காரருக்கு மற்றும் மதியுரையாளருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வ தற்காக முறையான கொள்கை யொன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தொழில்நுட்ப பீடத்தின் பூந்தோட்ட வேளாண்மை பண்ணையில் 2019 மார்ச் 25 ஆந் திகதியில் பெறுமதிசேர் வரி தவிர்ந்த ரூபா 14,995,485 செலவில் உள்ளக பாதையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் போது பொறியியல் மதிப்பீட்டுத் தொகையிலும் நூற்றுக்கு 15 சதவீதம் குறைந்ததன் காரணமாக 1, 2 மற்றும் 3 ஆகிய குறைந்த விலைகளை சமர்ப்பித்திருந்த விலை மனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தார்கள். எவ்வாறாயினும், பெறுகைகள் வழிகாட்டி புத்தகம் 7.9.2 உப பந்தியின் பிரகாரம் பொறியியல் மதிப்பீடு மற்றும் நிகழ்கால சந்தை நிலவரத்தை மீளாய்வு செய்வதற்காக இந்த வேறுபாட்டிற்கான காரணம் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக ஒப்பந்தத்தின் குறைந்த விலை மனுத் தொகையை விட ரூபா 1,443,195 அதிகமான தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிகழ்கால சந்தை நிலவரத்துடன் பொறியியல் மதிப்பீட்டை பகுப்பாய்வு செய்து மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எதிர்காலத்தில் நிகழ்கால சந்தை நிலவரத்துடன் பொறியியல் மதிப்பீட்டை பகுப்பாய்வு செய்து மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |